# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | | | |
|---|---|---|---|
| Case No: | | **SPL.S.C.No.20/2024** | |
| Prosecution Witness : | | **LW - 3 / PW - 3** | |
| Name : | ராமானுஜம் | Taluk : | |
| S/o. : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **07.02.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் ரெட்டிபாளையம் கிராமத்தில் மாரியம்மன் கோவில் தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்வரியை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். ராஜேஸ்வரிக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்றால் அதெல்லாம் எனக்கு தெரியாது. என் வீடு ஏரிக்கு வடக்கில் உள்ளது. ராஜேஸ்வரி வீடும், எதிரிகள் வீடும் என் வீட்டிலிருந்து அரை பர்லாங்கு தூரத்தில் உள்ளது. அவர்கள் இருவரும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள். எதிரிகள் சேர்ந்து ராஜேஸ்வரியையும், அவர் அம்மாவையும் அடித்தார்களா என்றால் அதெல்லாம் இல்லை, அது பற்றி எனக்கு தெரியவும் தெரியாது. போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ் சாட்சியாக கருத கோரி அரசு தரப்பில் வேண்டுதல் வைத்து அதன்படி அவரை பிறழ் சாட்சியாக கருதி அவரை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 22.01.2024 அன்று பகல் 12.00 மணியளவில் எங்கள் ஊர் பாப்பாங்குளம் அருகில் நானும், எங்கள் ஊரை சேர்ந்த ராமராஸ், திருசங்கு ஆகியோர்கள் பேசிக்கொண்டு இருந்தோம் என்றாலும், அப்போது ராஜேஸ்வரியும், அவரது அம்மா முத்தாயாவும், அவர்கள் வீட்டில் இருந்தார்கள்

என்றாலும், அப்போது எதிரிகள் அண்ணாதுரை, அன்புத்துரை, தனலெட்சுமி, ராஜா ஆகிய நால்வரும் ஒன்று சேர்ந்து கொண்டு, ராஜேஸ்வரி வீட்டில் அத்துமீறி நுழைந்தார்கள் என்றாலும், ராஜேஸ்வரியை பார்த்து அன்புதுரை பற தேவிடியா என்று அசிங்கமாக திட்டினார் என்றாலும், அதனை கேட்ட ராஜேஸ்வரியை, அன்புதுரை கழியால் இடது தொடையிலும், இடது முன்னங்கையிலும் அடித்தார் என்றாலும், அண்ணாதுரை ராஜேஸ்வரியை முதுகில் அடித்தார் என்றாலும், அதன்பின் ராஜேஸ்வரியை பார்த்து, இனிமேல் எங்களிடம் ஏதாவது வைத்து கொண்டால், வீட்டோடு கொளுத்தி விடுவோம் என்று ராஜேஸ்வரியை மிரட்டினார்கள் என்றாலும், அப்போது நான் உடனிருந்து சண்டையை விலக்கி விட்டேன் என்றாலும் சரியல்ல. தற்போது எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–இல்லை**

**மறு விசாரணை–**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.20/2024** |
| Prosecution Witness : | **LW - 6 / PW - 4** |
| Name : செங்குட்டுவன் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **07.02.2026**

(எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் உடையார்பாளயைம் தாலுக்கா, குண்டவெளி கிராமத்தில் கீழத்தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்வரியை தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். அவர்களுக்கிடையில் சண்டை நடந்தது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை நான் எதற்காக போட்டேன் என்றால் 30.01.2024 அன்று காலை 08.00 மணியளவில் நானும், எனது நண்பர் ராமானுஜமும் கறவை மாடு வாங்குவதற்காக ரெட்டிபாளையத்திற்கு செல்லும்போது, ராஜேஸ்வரி வீட்டு அருகில் போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். ஏதோ எழுதி படம் போட்டார்கள். அதில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு இப்போது ஞாபகத்தில் இல்லை. அப்போது போலீசார் படித்து காட்டினார்களா என்றால் ஆமாம். அந்த பார்வை மகசர் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படகிறது. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எந்த கட்சியில் இருக்கிறேன் என்றால் கமினியூஸ்ட் கட்சியில் இருக்கிறேன். கட்சி வேலைக்காக அடிக்கடி மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு செல்லுவேனா என்றால் எப்போதாவது செல்வேன். வாதி, எதிரிகள் அனைவரும்

எனக்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் சிவில் தகராறு இருப்பது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. போலீசார் விசாரித்து கொண்டிருந்தபோது நான் அந்த வழியாக தான் போனேன். பார்வை மகசரில் எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது, அதில் என்ன எழுதியிருந்தது என்றால் அது ஞாபகத்தில் இல்லை. நான் சம்பவ இடத்திற்கே போகவில்லை என்றாலும், போலீசார் காவல் நிலையத்தில் தயார் செய்து வைத்திருந்த மகசரில் நான் கையெழுத்து போட்டேன் என்றாலும் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு அடிக்கடி போவதால் போலீசார் கேட்டுகொண்டதன் பேரில் கையெழுத்து போட்டு விட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, ARIYALUR.**

| | |
|---|---|
| Case No: | **SPL.S.C.No.20/2024** |
| Prosecution Witness : | **LW - 7/ PW - 5** |
| Name : ராமானுஜம் | Taluk : |
| S/o. : | Age : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the Day **07.02.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் உடையார்பாளயைம் தாலுக்கா, சலுப்பை கிராமத்தில் காலனித்தெருவில் வசித்து வருகிறேன். நான் கறவை மாடு வாங்கி, வியாபாரம் செய்து வருகிறேன். அ.சா.1 ராஜேஸ்வரியை தெரியும். ஆஜர் எதிரிகளையும் தெரியும். அவர்களுக்கிடையில் சண்டை நடந்தது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அ.த.சா.ஆ.2 பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை நான் எதற்காக போட்டேன் என்றால் சுமார் 2 வருடங்களுக்கு முன்பு காலை 08.00 மணியளவில் நானும், எனது நண்பர் செங்குட்டுவனும் மீன்சுருட்டியிலிருந்து எங்கள் ஊர் சலுப்பைக்கு கறவை மாடு வாங்குவதற்காக சென்றோம், அப்போது ரெட்டிபாளையத்தில் ராஜேஸ்வரி வீட்டு முன்பாக மீன்சுருட்டி போலீசார் நின்று கொண்டிருந்தார்கள். ஏதோ எழுதி படம் போட்டார்கள். அந்த இடத்தில் ஏதோ இடப்பிரச்சனை இருப்பதாக சொல்லி படம் வரைந்தார்கள். ஒரு Statement எழுதினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மீன்சுருட்டியிலிருந்து சலுப்பைக்கு போவதற்கு எத்தனை வழிகள் உள்ளது என்றால் 4 வழிகள் உள்ளது. மீன்சுருட்டியிருந்து சலுப்பை செல்லும் எந்த வழியில் ராஜேஸ்வரி வீடு உள்ளது என்றால் குளத்திற்கு மேற்கில் அவர் வீடு உள்ளது. நான் நான் எந்த கட்சியில் இருக்கிறேன் என்றால் தி.மு.க கட்சியில் இருக்கிறேன். கட்சி வேலைக்காக அடிக்கடி மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு செல்லுவேனா என்றால் இல்லை. மீன்சுருட்டி போலீசார் யார் அந்த இடத்தில் இருந்தார்கள் என்றால் மீன்சுருட்டி SIயும், போலீசார் இரண்டு பேரும் இருந்தார்கள். அந்த தெருவில் எத்தனை வீடு உள்ளது என்றால் 3, 4 வீடுகள் இருந்தது. நான் போவதற்கு முன்பாக எழுதி வைத்திருந்த பேப்பரில் தான் கையெழுத்து போட்டேன் என்றால் ஆமாம். அந்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்றால் அது ஞாபகத்தில் இல்லை. நான் சொன்ன போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த கையெழுத்தும் நான் போடவில்லை என்றாலும், போலீசார் கேட்டுகொண்டதன் பேரில் மீன் சுருட்டி காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**–இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.